BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# குடிமக்கள் ஆலோசனை குழுக்கள், வாரியங்கள் மற்றும் தீர்ப்பாய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

## *2022-2026 காலத்திற்கான பதவிகளுக்குப் போட்டியிட, சமுதாயத்தின் மீது பற்று கொண்ட ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகள் உற்சாகமளிக்கப்படுகிறார்கள்*

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 2, 2023) – குடிமக்கள் யோசனை குழுக்கள், வாரியங்கள் மற்றும் தீர்ப்பாய பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்காக, நகரைக் கட்டமைப்பதற்கான பற்றுதல் மற்றும் நமது சமுதாயத்தின் எதிகாலத்திற்கு ஒரு உருவம் கொடுக்க உதவும் எண்ணம் கொண்ட குடியிருப்பு வாசிகள் வரவேற்கப்படுகிறார்கள்; இது இந்த நகரசபையின் ஆயுட்காலமாகிய 2022-2026 ஆண்டுகளுக்கானது.

இந்த குழுக்களின் உறுப்பினர்கள் நமது நகரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் மற்றும் உள்ளூர் அரசாங்க முடிவுகளில் நேரடியாக ஈடுபடுவார்கள். ப்ராம்ப்ட்டன் வாசிகளுக்கான முக்கியமான பிரச்சினைகள் குறித்து மேயர் மற்றும் கவுன்சிலுக்கு தெரிவிக்க இந்த ஆலோசனைக் குழுக்கள், வாரியங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் உதவுகின்றன. முடிவெடுக்கும் செயல்பாட்டில் பொதுமக்கள் பங்கேற்பது என்பது, வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், விளையாடுவதற்கும் சிறந்த இடத்தை உருவாக்குவதற்கு முக்கியமாகும்.

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

**குடிமக்கள்-அடிப்படையிலான ஆலோசனை குழுக்கள் மற்றும் வாரியங்கள் மற்றும் அதற்கான காலி பணியிடங்கள்:**

- அணுகல் தன்மைக்கான ஆலோசனைக் குழு
- செயல்பாடு கொண்ட போக்குவரத்துக்கான ஆலோசனைக் குழு
- ப்ராம்ப்ட்டன் பாரம்பரியத்துக்கான வாரியம்
- ப்ராம்ப்ட்டன் நூலக வாரியம்
- ப்ராம்ப்ட்டன் சமுதாயப் பாதுகாப்பு ஆலோசனைக் குழு
- ப்ராம்ப்ட்டன் பள்ளி போக்குவரத்து நெருக்கடி பாதுகாப்புக் குழு

• ப்ராம்ப்ட்டன் விளையாட்டுக்கான ஹால் ஆஃப் ஃபேம் குழு

• சுற்றுச்சுழலுக்கான ஆலோசனைக் குழு

**தீர்ப்பு வழங்கவல்ல குழுக்கள், நிர்வாக தீர்ப்பாயங்கள் மற்றும் பிற பணி நியமனங்கள்:**

• நிர்வாகரீதியான பணம் சார்ந்த அபராதம் விதிக்கும் அமைப்பின் விசாரணை மறுஆய்வு அதிகாரி

• ப்ராம்ப்ட்டன் மேல்முறையீட்டு தீர்ப்பாயம்

• சரிசெய்தல் குழு

• தேர்தல் இணக்க தணிக்கை குழு

• சொத்து தர நிர்ணயக் குழு

விண்ணப்ப படிவங்களைப் பெறுதல் மற்றும் தகுதி மற்றும் பொறுப்புக்கள் உள்ளிட்ட மேற்கொண்டு விபரங்களுக்கு, இங்கு க்ளிக் செய்யவும். விண்ணப்பங்களை பிப்ரவரி 28, 2023 மாலை 4:40 மணிக்குள்ளாக சமர்ப்பிக்க வேண்டும்.

குறைந்தபட்சம் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட நகரசபைக் குழுவானது, விண்ணப்பதாரர்களுடன் நேர்காணல்களை நடத்தி, மார்ச் மாதத்தில் பணி நியமனங்கள் குறித்த பரிந்துரைகளை மேயர் மற்றும் கவுன்சிலிடம் வழங்கும்.

கோரிக்கையின் பேரில் மாற்று வடிவ விண்ணப்பங்கள் கிடைக்கின்றன. மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**நகர தேர்தல் அலுவலரின் அலுவலகம்**

ப்ராம்ப்ட்டன் நகர் மன்றம்
2 வெலிங்க்ட்டன் வீதி W, ப்ராம்ப்ட்டன், ON L6Y 4R2
905-874-2100, cityclerksoffice@brampton.ca

**Media Release**

**அறிஞர் கூற்று**

“எதிர்காலத்தை நாம் எவ்வாறு திட்டமிடுகிறோம் என்பதில் குடிமக்கள் பணி நியமனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நல்ல ஆளுமைக்கான நிர்வாகம் மற்றும் வளர்ச்சிக்கு பொதுமக்களின் பங்களிப்பு இன்றியமையாதது. நாம் ஒன்றாக சேர்ந்து, சாத்தியமான வகையிலான மிகச்சிறந்த ப்ராம்ப்ட்டனை உருவாக்க முடியும். நமது நகரத்திற்கான இன்றைய தினத்தையும் செழிப்பான எதிர்கால தினத்தையும் வடிவமைப்பதில் உதவ உங்கள் பெயரை முன்வைப்பது பற்றி கருத்தில் கொள்ளுங்கள்.”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca